முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No. 103/2024**

**Witness PW 1**

பெயர்: சின்னதுரை

த/பெ.: கணேசன்

இன்று (08/04/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் எனது திருமணத்தை ரூ.10,00,000/- செலவு செய்து நடத்தியதாக சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணங்களை எதையும் தாக்கல் செய்யவில்லை. நல்லாபாளையம் கிராமத்தில் நாங்கள் இருவரும் இல்லற வாழ்க்கையை தொடர்ந்ததாக எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் செலவு செய்து திருமண செய்தது போல் எதிர்மதாரரும் திருமணத்திற்கு செலவுகள் செய்திருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்களது திருமணம் இந்து சாஸ்த்திர சம்பிராயப்படி நடந்த திருமணம் தான். திருமணத்தின் போது செய்ய வேண்டிய சடங்குகள் அனைத்தும் எங்கள் திருமணத்தின் போது செய்யப்பட்டது என்றால் சரிதான். திருமணம் முடிந்த பிறகு அம்போகம் வைப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது திருமணத்தின் போது இந்த நிகழ்ச்சி நடைபெற்றதா என்றால் எனக்கு தெரியாது- எங்களது திருமணத்தை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தார்கள். அது என் செலவில் தான் செய்யப்பட்டது. திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் வீடியோக்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தாக்கல் செய்வேன். மேற்படி புகைப்படம் மற்றும் வீடியோக்களை எனக்கு செய்யப்பட்ட சீதனப் பொருட்கள், நகைகள், உள்ளதா? இல்லையா-? என்றால் அது பற்றி எனக்கு தெரியாது- எனது திருமணத்தின் போது 25 சவரன் நகைகளும், கட்டில், பீரோ, மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் கொடுத்து திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் அவ்வாறு இல்லை. எதிர்மனுதாரர் தற்போது எனது வீட்டில் இருக்கிறார் என்றால் இருக்கிறார். நீதிமன்ற உத்தரவு டி.வி.சி மனுவில் பிறப்பிக்கப்பட்டதன் பேரில் அவ்வாறு உள்ளார். திருமணத்தின் போது கொடுக்கப்பட்ட நகைகள் வைத்து என் தகப்பனார் வட்டிக்கு விட்டு தொழில் செய்து வருகிறார் என்றால் அது முற்றிலும் பொய். டிவிசி மனுவில் யார் யார் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. ஞாபகம் இல்லை. டிவிசி மனுவில் இறுதி வாய்தாவின் போது நான் அந்த நீதிமன்றத்தில் முன்னிலை ஆனேனா என்றால் மேற்படி கேள்வி அனுமதிக்கப்படவில்லை. காவல் துறையில் பணிபுரிவதாக போன வாய்தா குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். டிவிசி நிலுவையிலுள்ள நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் எனது வீட்டில் வசிப்பது குறித்து ஆட்சேபணை செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி டிவிசி மனுவில் அசல் மனுவிற்கு நான் பதில் தாக்கல் செய்யவில்லை என்றால் முந்தைய வழக்கறிஞர் விவரம் சொல்லாததால் ஒருதலைப் பட்சமாக தீர்ப்பாகிவிட்டது. அதற்கு மேலாக நடவடிக்கை எடுத்துள்ளேன். டிவிசி மனு தாக்கல் செய்த காலத்தில் நான் என் தகப்பனார் மற்றும் தாயார் ஆகியோர் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. எனது தாயார் பெயர் தையல்நாயகி. எனது தாயார் டிவிசி வழக்கில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டு அவர்

நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று என் வீட்டிற்கு வரும்போது தான் நான் அம்மனுவில் எதிர்மனுதாரர் என தெரியவந்தது. அதன் பிறகு சரியான வாய்தா தேதியில் அந்த நீதிமன்றத்தில் முன்னிலையானேன் என்றால் சரிதான். அந்த டிவிசி மனு விவரங்களை படித்துப் பார்த்தேன். ஆனால் தற்போது அவை ஞாபகம் இல்லை. நீதிமன்றத்தில் வசிப்பிட உரிமை கேட்டு எதிர்மனுதாரர் தாக்கல் செய்த இடைக்கால மனுவில் பதில் தாக்கல் செய்துவிட்டு அசல் மனுவில், இந்த நீதிமன்றத்திலிருந்து விவாகரத்து உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில், இதுநாள் வரை பதில் தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே கால நீடிப்பு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த அசல் மனுவில் எதிர்மனுதாரர் கொடுக்கப்பட்ட சீர்வரிசைகள் குறித்து விவரங்கள் தெரிவித்துள்ளதால், நான் வேண்டுமென்றே பதிலளிக்காமல் உள்ளேன் என்றால் சரியல்ல. முதன்மை சாட்சியம் பத்தி 2ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அதே போல் பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்தும் நான் காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பத்தி 4ல் சொல்லப்பட்டுள்ள எதிர்மனுதாரர் குடும்ப உறுப்பினர்களுடன் சண்டையிட்டு வருகிறார் என்பது தொடர்பாக போலிசாரிடம் புகார் கொடுக்கவில்லை. எனவே காவலர் எண். 2237 ஆகும். விழுப்புரம் காவல் துறை கண்காணிப்பாளரின் கீழ் பணிபுரியும் கீழ்படிதலுள்ள காவலர் என்றால் சரிதான். நான் காவல் துறையில் பணிபுரிவதற்கு பணிப்பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். கடந்த 2022 அக்டோபர் 17ம் தேதி நான் எதிர்மனுதாரரை அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தி அதன் காரணமாக எதிர்மனுதாரர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது- இது தொடர்பாக எதிர்மனுதாரர் விழுப்புரம் காவல் துறை கண்காணிப்பாளரிடம் ஒரு புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இது தொடர்பாக அந்த புகார் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் அந்த புகார் நேரடியாக அனைத்து மகளில் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது- அதற்கு விசாரணையில் நான் முன்னிலையானேன். நான் காவல் துறையில் காவலராக பணிபுரிவதை சாதகமாக கொண்டு என் மீது புகார் பதிவாவதை தவிர்க்கும் விதமாக அழுத்தங்கள் பிரயோகித்தேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு வேறு வழியின்றி எதிர்மனுதாரர் நீதிமன்றத்தை நாடி என் மீதும் ள்ன் பெற்றோர் மீதும் நாங்கள் செய்த குற்றத்திற்காக வழக்கை பதிவு செய்யும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார் என்றால் சரியல்ல. முதன்மை சாட்சியம் பத்தி 7ல் சொல்லப்பட்டுள்ள எனது மனைவி பல்வேறு காவல் நிலையங்களில் புகார் கொடுத்தார். நான் அலைபேசியில் அழைத்த போது வரவில்லை என்பது போன்ற விவரங்களை வெளிப்படுத்தும் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. போலிசார் விசாரணையில் நான் முன்னிலையானேன். எனது பணி தொடர்பான பணிப்பதிவேட்டில் நான் விசாரணைக்கு செல்கிறேன் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. அன்று விடுப்பில் சென்றேன். பணிப்பதிவேட்டில் விடுப்பு சம்மந்தமாக குறிப்பிடவில்லை. (மனுதாரர் தரப்பில் மேற்படி பணிப்பதிவேட்டில் மனுதாரர் எழுத இயலாது என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது) பணியின் போது விடுமுறையில் சென்றால் அந்த குறிப்புகள் பணி செய்யும் இடத்தில் இருக்கும். அனைத்து காவல் நிலையங்களிலும் புகார் கொடுத்துள்ளார் என முதன்மை சாட்சியம் பத்தி 8ல் சொல்லியுள்ள தகவல்கள் பொருத்து நான் மனு வாதுரையில் சொல்லவில்லை என்றால்

சரிதான். எதிர்மனுதாரர் கொடுத்த புகார் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நீதிமன்றத்தில் பரிகாரம் கொள்கிறேன் என்று எழுதிக்கொடுத்தேன். அதை வைத்து காவல் நிலையத்தில் மனு முடிக்கப்பட்டதாக தெரிந்து கொண்டேன். சாட்சி மீண்டும் மேற்படி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனு மீதான முடிவு என்னவென்று தனக்கு தெரியவில்லை என சாட்சியம் அளித்துவிட்டார். குற்ற புகார் முதலில் கொடுக்கப்பட்டது தொடர்பாகவும், எனது குடும்ப அங்கத்தினர் மீது புகார்கொடுக்கப்பட்டு பாதிப்புகள் ஏற்படுவதை தடுப்பதற்காக, சிவில் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருந்தால் காவல் துறையும் குற்ற நீதிமன்றமும் நடவடிக்கை எடுப்பதை தவிர்த்துவிடும் என்ற கெட்ட நோக்கத்தோடு மட்டுமே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கில் எனக்கு நல்ல நோக்கம் எதுவும் கிடையாது என்றாலும் சரியல்ல. திருமணம் ஆகி ஓராண்டு கழித்து மட்டுமே தாக்கல் செய்ய வேண்டிய மனுவை அவசர கதியாக உடனடியாக திருமணம் ஆன சில மாதத்திலேயே மேற்படி குற்ற வழக்குகளை தவிர்க்க வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நான் கூறும் வகையில்எ னக்கு கொடுமைகள் எதையும் செய்யவில்லை என்றாலும், நான் தான் எதிர்மனுதாரருக்கு கொடுமைகள் இழைத்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. என்ன கொடுமைகள் செய்து வந்தாலும், என்னுடனான இல்லற வாழ்க்கையை தொடர வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு எதிர்மனுதாரர் எனது வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

Sd/Tr.C.R.Gowthaman,

Principal Sub Judge,
Villupuram